பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 13/2015

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2015.09.18

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபதிகள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளின் உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள்

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 2015.05.25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச தொழில் தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி வெளியிடப்பட்ட 2015.06.25 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. 2015.09.03 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 924 ஆம் கூட்டத்தின்போது, 2015.06.25 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையை கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுடன் **மீளமைப்பதற்குத்** தீர்மானிக்கப்பட்டது.

3. பல்கலைக்கழக முறைமையினுள் உத்தியோகபூர்வ வாகனப் பாவனைக்கான உரிமை, உத்தியோகபூர்வ வாகனத்திற்கான உரித்துடைமையைக் கொண்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த எரிபொருள் வரையறை, உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதற்குப் பதிலாக மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவைச் செலுத்தல் போன்ற விடயங்கள் 2015.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

4. உத்தியோகபூர்வ வாகன உரித்துடைமை மற்றும் மாதாந்த எரிபொருள் வரையறைகள்,

- பல்கலைக்கழக முறைமையில் உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பிட்ட எரிபொருள் கொடுப்பனவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இதன்போது உத்தியோகத்தர்களின் அலுவல்களின் தன்மை மற்றும் தொழில் சார்ந்த பொறுப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

- உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்களை மேற்கொள்வதற்காக மாதாந்தம் வரையறை செய்யப்பட்டுள்ள எரிபொருளின் அளவு போதாமலிருக்கும் விசேட சந்தர்ப்பங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக எரிபொருளுக்கான செலவை உண்மையான மேலதிக எரிபொருள் பாவனையின் அடிப்படையில் ஈடு செய்ய முடியும்.

* தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு – நிரல் அமைச்சின் செயலாளர்
* உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு – தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு
* உபவேந்தர்கள் - தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு
* ஏனைய உத்தியோகத்தர்கள் - நிர்வாக சபை

(அவ்வாறான கோரிக்கைகள் நிர்வாக சபையின் சிபாரிசுடனேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

- உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்கு உரித்துடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்த முடியும். அல்லது உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பதிலாக ரூபா 30,000/- மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் குறிப்பிட்ட பதவிக்குரித்தான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல் எனும் இரண்டு மாற்று வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். எவ்வாறாயினும், அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு சாரதியோ அல்லது சாரதிக்கான கொடுப்பனவோ வழங்கப்பட மாட்டாது.

- போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு மாதாந்தச் சம்பளத்துடன் சேர்த்துச் செலுத்தப்படும்.

- உத்தியோகபூர்வ வாகனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது போக்குவரத்துக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு இருப்பிலுள்ள வாகனங்கள் (Pool Vehicle) உட்பட எந்தவொரு அலுவலக வாகனங்களையும் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

- உத்தியோகத்தர் குழுவொன்று சேவை நிலையத்திலிருந்து 40 கிலோ மீட்டரிலும் அதிகமான தூரம் விசேட அலுவலொன்றின் நிமித்தம் கலந்துகொள்ளும் சந்தர்ப்பமொன்றின்போது குழுவாக பயணம் செய்வதற்கான போக்குவரத்து வசதிகளை எற்படுத்திக் கொடுக்க முடியும்.

- எவராவது ஒரு உத்தியோகத்தர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை வகிப்பாராயின் அவர் தனது நிரந்தரப் பதவிக்குரிய எரிபொருள் கொடுப்பனவை மாத்திரம் பெறுவதற்கு உரித்துடையராவார். எவ்வாறாயினும், மேலதிக பதவிகள் மற்றும் குறிப்பிட்ட அலுவலுக்கான பயணத்திற்காக நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அவ்வாறான பதவிக்கு / பதவிகளுக்கு உரிய உச்ச வரையறையின் கீழ் மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துடையவர்கள், தனிப்பட்ட பயணங்களின்போது சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய இணைந்த கொடுப்பனவுகளை தாமே ஏற்க வேண்டும்.

- ஒரு மாதத்திலும் அதிகளவு காலம் தேசிய அல்லது வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு நிர்வாக சபையின் விசேட அனுமதியின்றி போக்குவரத்துக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல், உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்தல் அல்லது சாரதியின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை கிடையாது. எவ்வாறாயினும், உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டை மீறிய நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருத்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ஒரு மாதத்திலும் அதிகளவு காலம் சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தருக்கு இந்த வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

அட்டவணை

பிரிவு இல.	01/2015 ஆம் இலக்க அரச தொழில் தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைப் பிரகாரம் உத்தியோகத்தர் பிரிவு	பல்கலைக்கழக முறைமையில் இதற்கு இணையான உத்தியோகத்தர்கள்	புதிய சுற்றறிக்கைப் பிரகாரம் மாதாந்த எரிபொருள் வரையறை (லீட்டர்)	அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு
01	தலைவர் / தகுதிவாய்ந்த அதிகாரி	தலைவர், பல்கலைக்கழக மா.ஆ.குழு/ உப தலைவர், பல்கலைக்கழக மா.ஆ.குழு / பல்கலைக்கழக உபவேந்தர்	170	அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் வரையறை (லீட்டர்) × குறிப்பிட்ட மாதத்தின் முதலாம் திகதி நிலவிய எரிபொருள் விலை
02	முகாமைத்துவப் பணிப்பாளர் / நிறைவேற்றுப் பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் / பணிப்பாளர் நாயகம்	செயலாளர், பல்கலைக்கழக மா.ஆ.குழு / பிரதி உப வேந்தர் / தாபனப் பணிப்பாளர் / வளாக அதிபதி	150	
03	பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் / பிரதம நிதி உத்தியோகத்தர்	பல்கலைக்கழகப் பதிவாளர் / மேலதிக செயலாளர் - பல்.மா.ஆ.குழு / பீடாதிபதி / பிரதம கணக்காளர் - பல்.மா.ஆ.குழு / பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - பல்.மா.ஆ.குழு/ நூலகர் - பல்.மா.ஆ.குழு/ கணக்காளர் - பல்.மா.ஆ.குழு/ பல்கலைக்கழக நிதிப் பொறுப்பாளர் / உள்ளகக் கணக்காய்வாளர் - பல்.மா.ஆ.குழு	140	
04	2006 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட, MSD 30 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் அத்திணைக்களத்தினால் HM1-1 வகை அல்லது அதனைவிடவும் உயர்ந்த பதவியை வகிக்கும் வேறு எந்தவொரு உத்தியோகத்தர் ஒருவர்	பணிப்பாளர் - தொழில்நுட்பக் கல்வி – திறந்த பல்.கழகம் / பணிப்பாளர் - பிரதேச கல்வி சேவை – திறந்த பல்.கழகம் / பணிப்பாளர் - செயற்பாடுகள் – திறந்த பல்.கழகம் / பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம் (U-EX 3) - பேராதனை/ களனி/ யாழ்ப்பாணம்/ திறந்த பல்.கழகம் / ரஜரட்ட பல்.கழகம்	120	

5. உயர் கல்வி நிறுவகங்கள் தற்போது காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கையினுள் இந்த வசதிகளை முகாமைப்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதுடன், இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக சாரதிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நிதியை அல்லது வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதிக்கான கோரிக்கைகளை 2015 ஆம் ஆண்டில் திறைசேரி அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தலாகாது.

6. வாகனங்கள் தொடர்பான பராமரிப்பு சம்பந்தமாக அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள சகல விதி முறைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

7. 09/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை அமுலுக்கு வந்தவுடன் உத்தியோகபூர்வ வாகன வசதிக்கான உரித்துடைமையைப் பெறும் உத்தியோகத்தர்கள் தமது மாதாந்த எரிபொருள் கொடுப்பனவில் ஏதேனும் குறைவு / மேலதிகத்தை 2015 ஒக்டோபர் மாதத்திற்கான அவர்களது மாதாந்த எரிபொருள் கொடுப்பனவுடன் சீர்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

8. புதிய உத்தியோகத்தர் பிரிவுக்காக இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2015.07.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

9. மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 1988.05.05 ஆம் திகதிய 366 மற்றும் 1992.07.20 ஆம் திகதிய 532 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைகள், 2009.03.25 ஆம் திகதிய 3/2009 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2015.06.25 ஆம் திகதிய 09/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா
தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/1/23